ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2283/28 - 2022 ජූනි මස 08 වැනි බදාදා - 2022.06.08
2283/28 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூன் மாதம் 08 ஆந் திகதி புதன்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### மதுவரி கட்டளைச்சட்டம்

**மதுவரி அறிவித்தல் இல. 04/2022**

எத்தைல் மதுசாரம் தொடர்பான மதுவரித் தீர்வை

காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரி கட்டளைச்சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவுடன் வாசிக்கப்படும் 32 ஆம் பிரிவின் மூலம் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்ஹ ஆகிய நான், இக்கட்டளை மூலம், 2016, மாச்சு 02 ஆந் திகதிய 1956/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 988 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் 1 ஆம் அட்டவணையைப் பின்வருமாறு திருத்துகின்றேன்.

இதனகத்து குறிப்பிடப்பட்டுள்ள விகிதங்கள் 2022, யூன் 09 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வருதல் வேண்டும். 2020, யூன் 09 ஆந் திகதிய 2179/09 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 04/2020 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல், இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.

**ரணில் விக்கிரமசிங்ஹ,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக்
கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசியக் கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2022, யூன் 08.

1A - PG 5868 — 96 (2022/06)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

### அட்டவணை I

| | *I ஆம் நிரல்*<br>*பொருள்* | *II ஆம் நிரல்* | *III ஆம் நிரல்* | |
|---|---|---|---|---|
| | | **மாதம் ஒன்றிற்கு உள்ளூரில் வழங்கப் படும்/இறக்குமதி செய்யப்படும் லீற்றர்கள்** | **தீர்வை (தொகை லீற்றர் ஒன்றிற்கு ரூபா)** | |
| | | | **உள்ளூரில் வழங்கப்படுபவை** | **இறக்குமதி செய்யப்படுபவை** |
| *1.* | அரசாங்க அங்கீகாரம் பெற்ற ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவகங்கள், மருத்துவமனைகள் மற்றும் அரச திணைக்களங்களால் பயன்படுத்தப்படும் எத்தைல் மதுசாரம். | *10,000 லீற்றர் வரை* | இலவசம் | இலவசம் |
| | | *20, 000 லீற்றர் வரை - சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவிற்காக* | | |
| | | *10,001 லீற்றர் முதல் 20,000 லீற்றர் வரை* | *700/-* | *800/-* |
| | | *20,000 லீற்றருக்கு மேல்* | *1,100/-* | *1,200/-* |
| *2.* | இறுதி தயாரிப்புகள் மதுவரி தீர்வைக்கு உட்படாத, மருத்துவ மற்றும் கைத்தொழில்துறை தயாரிப்புகளின் உற்பத்தியில் பயன்படுத்தப்படும் எத்தைல் மதுசாரம் | *500 லீற்றர் வரை* | இலவசம் | *300/-* |
| | | *501 லீற்றர் முதல் 10,000 லீற்றர் வரை* | *700/-* | *800/-* |
| | | *10,001 லீற்றர் முதல் 20,000 லீற்றர் வரை* | *800/-* | *900/-* |
| | | *20,000 லீற்றருக்கு மேல்* | *1,200/-* | *1,300/-* |
| *3.* | இறுதி தயாரிப்புகள் மதுவரி தீர்வைக்கு உட்படாத, ஏற்றுமதிக்கான தயாரிப்புகளில் அல்லது இயந்திரங்களைக் கழுவுவதற்குப் பயன்படுத்தப்படும் மற்றும் ஏற்றுமதிக்கான தயாரிப்புகளை உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படும் எத்தைல் மதுசாரம் | *500 லீற்றர் வரை* | இலவசம் | இலவசம் |
| | | *501 லீற்றர் முதல் 10,000 லீற்றர் வரை* | *700/-* | *800/-* |
| | | *10,001 லீற்றர் முதல் 20,000 லீற்றர் வரை* | *800/-* | *900/-* |
| | | *20,000 லீற்றருக்கு மேல்* | *1,200/-* | *1,300/-* |
| *4.* | தூய்மையற்ற எத்தைல் மதுசார ஸ்பிரீத்துகள் (தொழில்நுட்ப ஸ்பிரீத்துக்கள்/வலுவற்ற ஸ்பிரீத்துகள்) | ஒவ்வொரு லீற்றருக்கும் | *500/-* | *1,200/-* |
| 5. | மதுபான தயாரிப்பில் பயன்படுத்தப்படும் எத்தைல் மதுசாரம் | ஒவ்வொரு லீற்றருக்கும் | *10/-* | *10/-* |

EOG 06 - 0101

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.